# அச்சிடல் பெறுகைக்கான அழைப்பு – 2020/2021

## மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மாகாணம்

## NP/PDE/PRO/PRI/2020/04

1. மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் விபரப்படியான அச்சிடலினை மேற்கொள்வதற்கு திணைக்கள பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

| இல | அச்சிடலுக்கான விபரங்கள் | |
|---|---|---|
| A,B,C | புத்தகங்கள் | BOOKS |
| D | பரீட்சை வினாத்தாள்கள் | EXAM PAPER |
| E | சான்றிதழ்கள் | CERTIFICATE |
| F | பதாதைகள் | BANNER |
| G | ஸ்ரிக்கர் | STICKER |
| H | வீபரணங்கள் | POSTER |
| I | இலக்கங்கள் | NUMBERS |
| J | அழைப்பிதழ்கள் | INVITATION |
| K | துண்டுப்பிரசுரம் | LEAFLETS |
| L | பாட் பைண்டிங் | PAD BINDING |
| M | வேலை அடையாள அட்டை | JOB IC |
| N | வேலை அட்டை | WORK CARD |
| O | வேலைத் தாள் | WORK SHEET |
| P | கோவை தயாரித்தல் | FILE MAKING |

2. பெறுகைகள் அனைத்தும் தேசிய விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
3. தகுதியான கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் தமது பெயர் வராது இருப்பதனை உறுதிப்படுத்தி கீழ்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
   அ) தற்பொழுதும் செல்லுபடியாக உள்ள அச்சிடலுக்கான வியாபாரச்சான்றிதழ்.
   ஆ) பதிவானது வடமாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் II, இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
5. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தில் கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1,000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 06.05.2020 தொடக்கம் 26.05.2020 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக் கேள்விகள் 27.05.2020 திகதி 10.00 மணிக்கு முன்பதாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. கூறுவிலை சமரப்பித்தல் திகதியில் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையால் அரசாங்க அறிவித்தலின்படி அலுவலகம் மூடப்பட்டிருப்பின் அடுத்துவரும் அலுவலக நாளில் அதே நேரம் சகல நடைமுறைகளும் அமுலில் இருக்கும்.
8. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் பிரதம கணக்காளர் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
9. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 13.05.2020 காலை 10.00 மணிக்கு வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
10. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுப்பட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.


**பெயர்** :- செ. உதயகுமார்
**பதவி** :- தலைவர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர், திணைக்கள பெறுகைககள் குழு(பெரிது),
**முகவரி** :- மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.செம்மணி வீதி, நல்லூர்
**தெலைபேசி** :- 021-2242804/021-2242800
**தொலைநகல்** :- 021-2242646/021-2241383
**மின்னஞ்சல்** :- npedufin@gmail.com